# இயேசுவே வாரும்

ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும். வெளி. 22:20
*காலேப் யோசுவா*
☎: 044 – 26490183 Cell : 9444701953
*4/130, காந்தி தெரு, சென்னீர்குப்பம்,*
*பூந்தமல்லி, சென்னை* – 600 056.

## ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது

**1. நாம் சந்தோஷப்பட்டு களிகூர்ந்து அவருக்குத் துதி செலுத்தக்கடவோம். ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது, அவருடைய மனைவி தன்னை ஆயத்தம் பண்ணினாள் என்று சொல்லக் கேட்டேன். வெளி19:7.**

**2. பின்னும், அவன் என்னை நோக்கி : ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் பாக்கியவான்கள் என்றெழுது என்றான். வெளி.19:9.**

1. நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளர்ந்து, ஒரு பரிபூரண மனிதனின் வளர்ச்சியை அடைந்து, உலகத்தால் கறைபடாதபடிக்கு தங்களை காத்துக் கொண்டு, கர்த்தருக்கு எதிர்கொண்டு போக ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருக்க தங்களை ஆயத்தமாக்கி கொண்டிருக்கும் கிறிஸ்துவுக்குள்ளான புத்தியுள்ள, கற்புள்ள கன்னிகைகளுக்கு எழுதுகிறதாவது:
நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

2. இயேசு கிறிஸ்துவை பற்றிய வெளிப்படுத்துதலை தேவன் அவருக்கு கொடுத்ததும், அவர் சீக்கிரத்தில் சம்பவிக்க வேண்டிய காரியங்களை தம்முடைய ஊழியக்காரருக்கு காண்பிக்கும் பொருட்டு தம்முடைய துதனை அனுப்பி தம்முடைய ஊழியக்காரனாகிய யோவானுக்கு சின்னங்களினால் கொடுத்த காட்சியில் மேற்கண்ட தீர்க்கதரிசனம் காணப்படுகிறது. இந்த சம்பவங்கள் இனி நடக்கப்போகும் ஒன்றாக இருக்கிறது. வரும் நாட்களில் கிறிஸ்துவின் மணவாட்டி தன்னை ஆயத்தப்படுத்தினவளாக காணப்படுவாள். அவள் எடுத்துக்கொள்ளப்பட்டு, பின்பு ஆட்டுக்குட்டியானவரின் காலியான விருந்து நடைபெறும். அவ்விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் பாக்கியவான்களாக காணப்படுவார்கள்.

**3. கர்த்தாவே இது இனிநடக்கப் போகிற காரியமாக இருக்கிறபடியால், நான் இதை சரியான விதத்தில் அணுக, சரியான விதத்தில் பரிசுத்தவான்களுக்கு எடுத்துக் கூற, சரியான விதத்தில் இக்காலத்திற்குரிய செய்தியோடு இதை இணைத்து ஜனங்களுக்கு காண்பிக்க பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலைக் எனக்குக் கொடும். உம்முடைய வசனங்கள் நிச்சயமாக நிறைவேற வேண்டும். அது அப்படியே ஆகும். ஆமென்.**

**4. கிறிஸ்துவின் மணவாட்டி தன்னை ஆயத்தப்படுத்த, அவள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை அறிகிய அறிவில் வளர வேண்டியவளாய் இருக்கிறாள். அவருடைய திவ்விய சுபாவத்தில் பங்கு கொள்ள அவள் அதிக ஜாக்கிரதை உள்ளவளாய் தன்னுடைய விசுவாசத்தோடே வல்லமையையும், வல்லமையோடே ஞானத்தையும், ஞானத்தோடே தன்னடக்கத்தையும், தன்னடக்கத்தோடே பொறுமையையும், பொறுமையோடே தேவபக்தியையும், தேவ பக்தியோடே சகோதர சிநேகத்தையும் கூட்டி கூட்டிச் சேர்க்க வேண்டியவளாய் இருக்கிறாள். இயேசு கிறிஸ்து இந்த ஏழு திவ்விய சுபாவங்களில் பரிபூரணப்படுகிறார். அவருடைய சரீரமாக காணப்படும் அவருடைய மணவாட்டியும் இந்த ஏழு திவ்விய சுபாவங்களில் பரிபூரணப்படவேண்டும். அப்பொழுதுதான் கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் அவளுக்கு பரிபூரணமாக அளிக்கப்படும். இதை நீங்கள் 2 பேது 1:1-11 வசனங்களில் தியானிக்கலாம். தேவனுடைய வளர்ச்சிக்கு ஏழு சுபாவங்கள். ஏழு தேவனுடைய பரிபூரணம். தேவன் ஏழில் பரிபூரணப்படுகிறார். ஒரு ஸ்திரீயும் தன் புருஷனுடைய திவ்விய சுபாவங்களில் பங்கு கொள்ள வேண்டியவளாய் இருக்கிறாள். ஏனென்றால் அவள் அவன் சரீரத்தின் ஒரு பாகமாக இருக்கிறாள். கிறிஸ்துவின் மணவாட்டி அவருடைய சரீரமாக இருப்பதால் அவருடைய திவ்விய சுபாவத்தில் பங்குள்ளவளாக காணப்பட வேண்டும்.**

5. நம்முடைய சரீரம் ஒரு பரிபூரண மனிதனின் வளர்ச்சியடைந்து அது தேவன் வாசம் செய்யும் ஆலயமாக மாற நாம் மேற்கண்ட ஏழு திவ்விய சுபாவங்களில் பரிபூரண வளர்ச்சி அடைய வேண்டும். அவைகள் பரிபூரணமாக நம்மில் வாசமாயிருக்க வேண்டும். பால் உணர்ச்சியின் காரணமாக நாம் பிறந்தோம். நம்முடைய ஜீவன் இந்த பிரபஞ்சத்துக்கு கொண்டுவரப்பட்டது. தேவனுடைய ஆவி நம்மேல் ஊற்றப்பட்டதன் மூலம் நம்முடைய உலக சுபாவங்கள் மாறி நாம் தேவனுடைய தெய்வீக, திவ்விய சுபாவங்களை தரித்துக் கொண்டு தேவன் வசிக்கத்தக்க ஆலயமாக மாறுகிறோம். இயேசு இதையே நீங்கள் என்னிலும், நான் உங்களிலும் இருக்கிறதை அந்நாளிலே அறிவீர்கள் என்றார் (யோ.14:20)

6. பாருங்கள். கிறிஸ்துவின் ஏழு திவ்விய சுபாவங்களை பரிபூரணமாக, முழுமையாக எந்தவித குறைவும் இன்றி அனைத்தையும் பெற்றிருக்க வேண்டும். அது தான் உங்களை மணவாட்டிக்கு தகுதிப்படுத்தும். அதுதான் உங்களை ஆட்டுக்குட்டியின் மனைவி தன்னை ஆயத்தப்படுத்தினாள் என்ற நிலைக்கு தகுதிப்படுத்தும். அது தான் உங்களை கிறிஸ்துவின் சரீரத்தில் ஒரு அவயவமாக சேர்க்கும். அப்பொழுதுதான் உங்கள் சரீரம் தேவன் வாசம் செய்யும் ஆலயமாக மாறும். அப்பொழுதுதான் அன்பாகிய தலைக்கல் உங்கள் மீது வந்து அமரும், இணையும். அப்பொழுது கிறிஸ்துவின் சரீரமாகிய நீங்களும், தலையாகிய கிறிஸ்துவும் இணைக்கப்பட்டு நீங்கள் கிறிஸ்துவின் மணவாட்டியாக மத்திய ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்படுவீர்கள். நீங்கள் கிறிஸ்துவின் சரீரத்தில் இருந்தால் மட்டுமே இயேசு மரித்தோரிலிருந்து எழுந்தது எப்படி நிச்சயமோ அப்படி நிச்சயமாய் நீங்களும் எழுந்திருப்பீர்கள். இயேசு எடுத்துக் கொள்ளப்பட்டது போல நீங்களும் எடுத்துக் கொள்ளப்படுவீர்கள்.




ஒரு பரிபூரண மனிதனின் வளர்ச்சி




ஒரு பரிபூரண மனிதனின் வளர்ச்சியுடன்
ஏழு சபை காலங்களும் அதின் தூதர்களும்

**13. விசுவாசம் (Faith):** ஒரு பரிபூரண மனிதனின் கட்டிடத்திற்கு விசுவாசம் அஸ்திபாரம். விசுவாசம் என்பது என்ன? இது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணக்கூடாதவைகளின் நிச்சயமுமாய் இருக்கிறது (எபி.11:1) நம்பிக்கை என்பது ஒன்று நடக்கும் என்பதாகும். விசுவாசம் என்பது அது நடந்து விட்டது என்பதாகும். உதாரணமாக என் நம்பிக்கை நான் இந்த வியாதியிலிருந்து நிச்சயமாக சுகமாவேன் என்பது. ஆனால் என்னுடைய விசுவாசமோ நான் அந்த விவாதியிலிருந்து சுகமானேன் என்பதாகும். அதாவது சுகமாகிவிட்டேன் என்பது ஆகும். விசுவாசத்திற்கு எதுவும் தேவையில்லை. விசுவாசமானது தேவனுடைய வார்த்தையை முற்றிலுமாக நம்பும். விசுவாசம் கேள்வியினாலே வரும். கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும் (ரோ10:17) என்னுடைய விசுவாசத்தை நான் தேவனுடைய வார்த்தையில் வைப்பேனாகில் அதுவே நங்கூரம் பாய்ச்சப்பட்டதாகும். விசுவாசம் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்கே உண்டாகும். (தீத் 1:3) விசுவாசம் பரிசுத்த ஆவியின் அருக்கிரகங்களில் ஒன்று. (1கொரி 12:9) விசுவாசத்தை துவக்குகிறவரும், முடிக்கிறவரும் இயேசுவே. (எபி 12:1)

14. இந்த விசுவாசத்தை பெற ஒருவன் மறுபடியும் பிறக்க வேண்டும். அதாவது ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறக்க வேண்டும். நீ மறுபடியும் பிறக்கும்போது நீ விசுவாசத்தை உடையவனாய் தேவனுடைய வார்த்தையை விசுவாசிக்கிறாய். நீ மறுபடியும் பிறக்கும் வரை தேவனுடைய வார்த்தைக்கு விரோதமாக தர்க்கிக்கிறவனாய் இருக்கிறாய். நீ மறுபடியும் பிறக்கும்போது அது விசுவாசத்தை உறுதி செய்கிறது. இந்த விசுவாசம் உனக்கு கிடைத்த பின்பு, நீ விசுவாசத்திற்கு ஏற்ற நிலைமையில் வைக்கப்படுகிறாய்.

15. கர்த்தர் ஆபிரகாமை நோக்கி: நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும்விட்டு புறப்பட்டு, நான் உனக்கு காண்பிக்கும் தேசத்திற்கு போ. நான் உன்னை பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பெயரைப் பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய், உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன். உன்னை சபிக்கிறவர்களை சபிப்பேன்; பூமியிலுள்ள வம்சங்கள் எல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்றார். கர்த்தர் ஆபிரகாமிற்கு சொன்னபடியே அவன் புறப்பட்டுப் போனான். (ஆதி12:1-4) பாருங்கள், விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் சுதந்தரமாக பெறப்பேகிற இடத்திற்கு போகும்படி அழைக்கப்பட்டபோது, கீழ்ப்படிந்து தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டு போனான் (எபி.11:8). மேலும் பாருங்கள் ஆபிரகாம் தேவனுடைய வார்த்தையை விசுவாசித்தான். அதற்கு உடனே கீழ்ப்படிந்தான் அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது. ஆபிரகாம் விசுவாசத்தில் பலவீனமாய் இருக்கவில்லை தேவனுயை வாக்குத்தத்தத்தை குறித்து அவிசுவாசமாய் சந்தேகப்படாமல், தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்ற வல்லவராய் இருக்கிறார் என்று முழு நிச்சயமாக நம்பி தேவனை மகிமைப்படுத்தி, விசுவாசத்தில் வல்லவனானான் (ரோ 4:19-21) ஆம், ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது (ரோ.4:3).

16. ஆபிரகாமுடைய வாழ்க்கையில் விசுவாசம், கீழப்படிதலைக் கொண்டு வந்தது. இன்று நாம் நம்மை கிறிஸ்தவர்கள் என்று அழைத்துக் கொள்கிறோம். தேவனுடைய ஆவியைப் பெற்றவர்கள் என அழைத்துக் கொள்கிறோம். கிறிஸ்துவினுடைய மணவாட்டி என மார்பு தட்டிக்கொள்கிறோம். ஆனால் நாம் தேவனை விசுவாசிக்கிறோமா? அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிகிறோமா? அப்.2: 38, நீதி .3:27, 1பேது .3:3-6, 1கொரி 11:15, தீத். 2:5 வசனங்களுக்கு நாம் கீழ்ப்படிகிறோமா? நம்மை நாமே சற்று சீர்தூக்கிப் பார்ப்போம்.

17. இயேசு: வானமும், பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை என்றார் (லூக் 21:33) ஏனெனில் கர்த்தாவே உமது வசனம் என்றென்றைக்கும் வானங்களில் நிலைத்திருக்கிறது. (சங் 119:89) விசுவாசிகளாகிய நாம் அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள் என்பவருடைய அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டவர்களாய் இருக்கிறோம். அதற்கு இயேசு கிறிஸ்து மூலைக்கல். (எபே2:20) இயேசுவும் சீஷர்களை நோக்கி : உங்களுக்கு செவி கொடுக்கிறவன் எனக்கு செவி கொடுக்கிறான்; உங்களை அசட்டை பண்ணுகிறவன் என்னை அசட்டை பண்ணுகிறான். என்னை அசட்டை பண்ணுகிறவன் என்னை அனுப்பினவரை அசட்டை பண்ணுகிறான் என்றார் (லூக் 10:16) பாருங்கள், வேதவாக்கியங்கள் எல்லாம் தேவஆவியினால் அருளப்பட்டு இருக்கிறது (2தீமோ3:16) நம்முடைய கரங்களில் உள்ள பரிசுத்த வேதாகமம் தேவனுடைய வார்த்தைகளை கொண்டது. வானமும் பூமியும் ஒழிந்து போகும். ஆனால் தேவனுடைய வார்த்தைகள் ஒருக்காலும் ஒழிந்துப் போகாது. வேதாகமத்தில் அடங்கியுள்ள ஒவ்வொரு வார்த்தைகளுக்கும் நாம் கீழ்ப்படிய வேண்டும்.

மனந்திரும்பி முற்றிலுமாக மாறவேண்டும். நீ முற்றிலுமாக மாறும்போது ஒரு புது சிருஷ்டியாகிறாய். அப்பொழுது கம்புளியைக் குறித்த கவலை உனக்கு வேண்டியதில்லை. நீ மறுபடியும் பிறக்கும்போது கம்புளியைக் குறித்த காரியத்தை அதுவே பார்த்துக் கொள்ளும், கவனித்துக் கொள்ளும். நீ மறுபடியும் பிறக்காததால் தான் உன்னை அலங்கரிக்கிறாய். நீ மறுபடியும் பிறக்கும்போது அந்த மறுபிறப்பு உன்னை முற்றிலுமாக மாற்றி விடும். நீ உன்னை மாற்ற வேண்டிய தேவையே இல்லை. அதுவே உன்னை முற்றிலுமாக மாற்றிவிடும். தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிய உன்னை நடத்தும். அதற்குரிய விசுவாசத்தை உன்னிடத்தில் அந்த மறுபிறப்பு கொண்டு வரும்.

23. ஆதலால் கிறிஸ்துவுக்குள் எனக்கு பிரியமானவர்களே, நீங்கள் உங்கள் மயிரைப்பின்னி, பொன் ஆபரணங்களை அணிந்து, விலையுயர்ந்த ஆடைகளை அணிந்துக் கொண்டு உங்களை ஒரு கிறிஸ்தவள் என்றே அழைக்காதீர்கள். நீங்கள் ஒரு காகமாக இருந்து கொண்டு உங்களுடைய சிறகுகளில் மயிலின் சிறகுகளை சொருகிக்கொண்டு உங்களை ஒரு மயிலாக காட்ட முயற்சிக்காதீர்கள். நீங்கள் பாசாங்கு செய்யாதீர்கள். உங்கள் நடத்தை நீங்கள் காகமா, மயிலா என்று காட்டிவிடுகிறது. ஆக 1பேது 3:3-6 வசனங்களை நீ விசுவாசிக்காவிட்டால், அதற்கு கீழ்ப்படியாவிட்டால், நீ ஒரு கிறிஸ்தவளே அல்ல. மாறாக நீ சாத்தானின் கூட்டத்தை சேர்ந்தவள். தங்களுக்கும் கிறிஸ்துவுக்கும் எந்தவிதமான சம்மந்தமும் இல்லாவிட்டாலும், தாங்கள் கிறிஸ்தவர்கள் என்று கூறி இவர்கள் கர்த்தருடைய நாமத்தை வீணாய் வழங்குகிறார்கள்.

24. அப்படியானால் ஒரு பெண்ணின் அழகு என்ன? அவள் தன் காதுகளில் அணிந்துள்ள தங்க கம்மலா அல்லது வைர கம்மலா? அல்லது தனது மூக்கில் அணிந்துள்ள மூக்குத்தியா? அல்லது தன் கழுத்தில் அணிந்துள்ள நெக்லஸா அல்லது தன் கைகளில் போட்டுள்ள வளையல்களா? அல்லது தனது விரல்களில் அணிந்துள்ள மோதிரமா? விழுந்த பல் இடத்தில் தங்கப்பல் கட்டியதா? இவையாவும் அழகுபடுத்தும் அழகு சாதனங்கள். இவை யாவும் யேசபேல் தன்னை அழகு படுத்த உபயோகித்த அழகு சாதனங்கள். இந்த யேசபேல் யார்? தேவனுடைய வார்த்தை அவள் ஒரு வேசி என்று கூறுகிறது. உங்களையும் தேவனுடைய வார்த்தை நியாயம் தீர்க்கிறது.

25. பாருங்கள் ரெபெக்காள் தேவனிடத்தில் நம்பிக்கையாய் இருந்த ஒரு பரிசுத்த ஸ்திரீ. அவள் தன்னை எதினால் அழகு படுத்தினாள்? மேற்கூறிய அழகு சாதனங்களைக் கொண்டா? அல்ல. பின் எதனால்? தன்னை அவள் **குணம்** என்ற அழகு சாதனத்தினால் அழகுபடுத்தினாள். அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றதாக இருந்தது. அதுவே எலியேசரின் பார்வையிலும் விலையேறப்பெற்றதாக இருந்தது. பாருங்கள் எலியேசர் அவளிடம் உன் குடத்தில் இருக்கிற தண்ணீரில் கொஞ்சம் எனக்கு குடிக்கத் தரவேண்டும் என்றான். அவள் என் ஆண்டவனே குடியும் எனக் கூறி அவனுக்கு குடிக்க தண்ணீர் கொடுத்தாள். இப்பொழுது அவளுடைய நற்குணத்தை கவனியுங்கள் அவள் எலியேசரை நோக்கி : உம்முடைய ஒட்டகங்களும் குடித்துத் தீரும் மட்டும் அவைகளுக்கும் தண்ணீர் கொண்டு வார்ப்பேன் என்றாள். இதை நீங்கள் ஆதி 24:17-20 தியானிக்கலாம். பிரியமானவர்களே உங்கள் கம்மலும் உங்கள் நெக்லஸ்சும் உங்கள் வளையல்களும் தேவனுயை பார்வையில் விலையேறப்பெற்றதாக இல்லை. மாறாக உங்கள் குணமே தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றதாக இருக்கிறது. இதுவே ஒரு பெண்ணுக்குரிய அழியாத அலங்கரிப்பு என்று தேவனுடைய வார்த்தை கூறுகிறது. நீ இதை விசுவாசிக்கிறாயா? நீ விசுவாசித்தால் உனக்குள் தேவனுடைய ஆவி. நீ மறுதலித்தால் உனக்குள் பிசாசு. இது நூறு சதவீதம் உண்மை.

26. அடுத்து பூர்வத்தில் தேவனிடத்தில் நம்பிக்கையாயிருந்த பெண்கள் தங்கள் புருஷர்களுக்கு கீழ்ப்படிந்து தங்களை அலங்கரித்தார்கள். ஏனென்றால் புருஷன் ஸ்திரீக்கு தலையாய் இருக்கிறான். (1கொரி 11:3) புருஷன் தேவனுடைய சாயலும், மகிமையுமாய் இருக்கிறான். (1கொரி 11:7) ஆனால் ஸ்திரீயோ புருஷனுடைய மகிமையாய் இருக்கிறாள். (1கொரி 11:7) புருஷன் ஸ்திரீயிலிருந்து தோன்றினவன் அல்ல. ஸ்திரீயே புருஷனிலிருந்து தோன்றினவள். (1கொரி 11:8) புருஷன் ஸ்திரீக்காக சிருஷ்டிக்கப்பட்டவன் அல்ல. மாறாக ஸ்திரீயே புருஷனுக்காக சிருஷ்டிக்கப்பட்டவள். (1கொரி 1:9) ஆதலால் மனைவி புருஷனுக்கு எந்தக் காரியத்திலும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும். (எபே 5:24). ஆம் இந்த கீழ்ப்படிதலே ஒரு பெண்ணுக்கு அழகு. பெண்களே, நீங்கள் உங்கள் புருஷனுக்கு எந்தக்காரியத்திலும் கீழ்ப்படிந்திருக்காவிட்டால் உங்கள் இல்லற வாழ்க்கை கிறிஸ்துவுக்கும் அவருடைய சரீரமாகிய சபைக்கும் உள்ள ஐக்கியத்தை பிரதிபலிக்காது. மாறாக அது சாத்தானுக்கும் உங்களுக்கும் உள்ள ஐக்கியத்தையே பிரதிபலிக்கும்.




27. முடிவாக பிரியமானவர்களே உங்களுக்கு விசுவாசம் தேவை. அதுதான் உங்கள் வாழ்க்கை ஆகும். அதுதான் உங்கள் வாழ்க்கையின் அஸ்திபாரம். உங்கள் விசுவாசம் உங்கள் மத்தியிலுள்ள ஆயிரக்கணக்கான ஸ்தாபன சபைகள் மீது அல்ல, ஜெபவீடுகள் மீது அல்ல. உங்களுக்கு பிரியமான ஊழியக்காரர் மீது அல்ல. மாறாக உங்கள் விசுவாசம் தேவனுடைய வார்த்தையின் மேல் தங்கியிருக்க வேண்டும். நீங்கள் ஆதி 1:1 முதல், வெளி 22:21 வரை அனைத்தும் தேவனுடைய வார்த்தை என்று விசுவாசித்து அதற்கு முற்றிலுமாக கீழ்ப்படிய வேண்டும். எபேசு சபை மணவாட்டி விசுவாசத்தில் மட்டும் பூரணப்பட்டிருந்தாள். அது அவளுக்கு போதுமானதாக இருந்தது. ஆனால் அதன்மீது தலைக்கல் அமர முடியாது.

28. ஒரு மனுஷன் நியாயப்பிரமாணத்தின் கிரியைகள் இல்லாமல் விசுவாசத்தினாலேயே நீதிமானாக்கப்படுகிறான். (ரோ3:28) விசுவாசத்தினாலே நீதிமானாக்கப்படுகிறோம். மேலும் அதே விசுவாசத்தினாலேயே நாம் பரிசுத்தமாக்கப்படுகிறோம். விசுவாசத்தினாலேயே அவர்கள் இருதயங்களை அவர் சுத்தமாக்கினார். (அப் 15:9) இதோடு மட்டுமல்லாமல் விசுவாசத்தினாலேயே பாவ மன்னிப்பையும், பரிசுத்தமாக்கப்பட்டவர்களுடைய சுதந்தரத்தையும் பெற்றுக் கொள்கிறோம். (அப் 26:18) இந்த விசுவாசத்தை தேவனுடைய ஆவியினால்தான் ஒருவர் பெறமுடியும் (1கொரி 12:9) ஆம் விசுவாசத்தை துவக்குகிறவரும், முடிக்கிறவரும் இயேசுவே (எபி 12:1) ஆதலால் நீ தேவனுடைய மந்தையின் ஆடாக இருப்பாயானால் தேவனுடைய வார்த்தையை விசுவாசிப்பாய், அதற்கு கீழ்ப்படிவாய், நீ அந்நியனுடைய சத்தத்தை அறியாய். ஸ்தாபன சபைகளின் சத்தத்தை அறிவாய். ஆதலால் அந்நியனுக்குப் பின் செல்ல முடியாது. 1பேது 3:3-6க்கு நீ செவி கொடுக்கவில்லை என்றால் நீ அந்நியனுக்கு செவி கொடுத்து அவன் பின் செல்லும் ஆடாக இருக்கிறாய். அப்படியானால் நீ தேவனுடைய மந்தையில் உள்ள ஆடு அல்ல.

செய்கையினாலும் கீழ்ப்படிய பண்ணும்படிக்கு அற்புத அடையாளங்களின் பலத்தினாலும், தேவ ஆவியின் பலத்தினாலும் கிறிஸ்துவானவர் என்னை நடப்பித்தார் என்கிறான். (ரோ. 15:18) ஆம், ஆவியின் வல்லமையினால் தேவன் அவனை நடப்பித்தார். ஸ்தேவானைப் பாருங்கள், அவன் விசுவாசத்தினாலும், வல்லமையினாலும் நிறைந்தவனாய் ஜனங்களுக்குள்ளே பெரிய அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்தான். (அப்6:8) அவன் பேசிய ஞானத்தையும் ஆவியையும் எதிர்த்து நிற்க யாராலும் கூடாதிருந்தது. அப்போஸ்தலர்கள் காலத்தில் கிறிஸ்துவின் சுவிசேஷம் வசனத்தோடே மாத்திரமல்ல, வல்லமையோடும் பரிசுத்த ஆவியோடும், முழு நிச்சயத்தோடும் வந்தது.

37. இரண்டு குருடர்கள் தாவீதின் குமாரனே எங்களுக்கு இரங்கும் என்று கூப்பிட்டார்கள். இயேசு அவர்களை நோக்கி: இதைச் செய்ய எனக்கு வல்லமை உண்டென்று விசுவாசிக்கிறீர்களா என்று கேட்டார். அதற்கு அவர்கள்: ஆம், விசுவாசிக்கிறோம் ஆண்டவரே என்றார்கள். அப்பொழுது அவர்களுடைய கண்களை அவர் தொட்டு : உங்கள் விசுவாசத்தின்படி உங்களுக்கு ஆகக்கடவது என்றார். உடனே அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டது. (மத் 9:27-30) இந்த வல்லமை தான் நமக்குத் தேவை.

38. ஆம் நீ விசுவாசத்தை பெற்றிருந்தால் மட்டும் போதாது, அதோடு வல்லமையையும் கூட்டிச் சேர்க்க வேண்டும். விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன:

அ) கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினாலே பிசாசுகளை துரத்துவார்கள்.
ஆ) கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினாலே நவமான பாஷைகளைப் பேசுவார்கள்.
இ) கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினாலே சர்ப்பங்களை எடுப்பார்கள். அது அவர்களை சேதப்படுத்தாது.
ஈ) கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினாலே சாவுக்கேதுவான யாதொன்றை குடித்தாலும் அது அவர்களை சேதப்படுத்தாது.
உ) கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினாலே வியாதியஸ்தர்கள் மீது கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள். இதென்ன? விசுவாசிகளிடமிருந்து தேவனுடைய வல்லமை புறப்பட்டு செல்வதாகும். பிதா குமாரன் பரிசுத்த ஆவி நாமத்தினாலே அற்புத அடையாளங்களை செய்ய முடியாது. அற்புத அடையாளங்கள் நடக்கவும் நடக்காது. பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமம், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து. ஆதலால் தான் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் அற்புத அடையாளங்கள் நடக்கிறது. அற்புத அடையாளங்கள் மட்டுமல்ல, ஒருவனுடைய ஆத்தும இரட்சிப்பும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்திலே உள்ளது என்பதை மறந்து விடாதீர்கள். சிமிர்னா சபை மணவாட்டி விசுவாசத்திலும் வல்லமையிலும் பரிபூரணமடைய வேண்டியதாயிருந்தது. ஆனாலும் அது தலைக்கல் வந்து அமரக்கூடிய வளர்ச்சி அல்ல.




சிமிர்னா சபை மணவாட்டி விசுவாசத்தோடு வல்லமையையும் கூட்டி பரிபூரணப்பட வேண்டியதாயிருந்தது. ஆனாலும், விசுவாசம் மற்றும் வல்லமையோடு தலைக்கல் பொருந்தாது.

39. ஞானம் (knowledge): இது உலகபிரகாரமான ஞானம் அல்ல. ஏனென்றால் உலகப் பிரகாரமான ஞானம் தேவனுக்கு முன்பாக பைத்தியமாய் இருக்கிறது. இந்த ஞானம் பரத்திலிருந்து இறங்குகிற ஞானம். இந்த ஞானத்தை எதிர்த்து நிற்க யாராலும் கூடாது. (அப் 6:10). இது நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மகிமையின் பிதாவுமானவரை நீங்கள் அறிந்துக் கொள்ள கொடுக்கப்படும் ஞானம். (எபே 1:17). இந்த ஞானத்தை கண்டெடுப்பது எங்கே? இதன் விலை மனுஷனுக்குத் தெரியாது. இது ஜீவனுள்ளோருடைய தேசத்திலே அகப்படுவதில்லை. ஆழமானது: அது என்னிடத்தில் இல்லை என்கிறது. சமுத்திரமானதும் அது என்னிடத்தில் இல்லை என்கிறது. இதற்கு ஈடாக தங்கத்தை கொடுக்கவம், இதற்கு கிரையமாக வெள்ளியை நிறுக்கவும் கூடாது. ஓப்பீரின் தங்கமும், விலையேறப்பெற்ற கோமேதகமும், இந்திர நீலக்கல்லும் இதற்கு ஈடு அல்ல. பொன்னும் பளிங்கும் இதற்கு ஒப்பல்ல. பவளத்தையும் ஸ்படிகத்தையும் அத்தோடே ஒப்பிட்டு பேசலாகாது. எத்தியோப்பியாவின் புஸ்பராகமும் அதற்கு நிகரல்ல. பசும் பொன்னும் அதற்கு சரியல்ல. இப்படி இருக்க ஞானம் எங்கேயிருந்து வரும்? அது ஜீவனுள்ள சகலருடைய கண்களுக்கும் ஒளித்தும் ஆகாசத்து பறவைகளுக்கு மறைந்தும் இருக்கிறது. தேவனே அதன் வழியை அறிவார். அதின் ஸ்தானம் அவருக்கே தெரியும். (யோபு 28:12-23) நாம் இந்த ஞானத்தைத்தான் பெற வேண்டும். தேவன் தன்னுடைய பார்வைக்கு நல்லவனாய் இருக்கிறவர்களுக்கு இந்த ஞானத்தை அருளுகிறார். (பிரச. 2:26)கர்த்தரே இந்த ஞானத்தை தருகிறார். அவர் இந்த ஞானத்தை நீதிமான்களுக்கென்று வைத்திருக்கிறார். (நீதி 2:6.7).

40. நன்மை தீமை எது என்று வகையறுத்து நியாயந்தீர்க்கிற ஞானம் இது. எந்த மனுஷனும் பொய்யனே. தேவன் ஒருவரே சத்தியபரர். இதுவே உன்னதமான தேவ ஞானமாயிருக்கிறது. ஒரு உண்மையான தேவமனுஷனாக நீ வளர்ச்சியடைய வல்லமை, ஞானம் போன்றவைகள் விசுவாசம் என்கிற அடிப்படையான அஸ்திபாரத்தின் மேல் வைப்பதற்காக தேவனால் அருளப்படுகிறது. கிறிஸ்து தேவஞானமாய் இருக்கிறார். (1கொரி 1:24) அவருக்குள் ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்கள் எல்லாம் அடங்கி இருக்கிறது. (கொலோ 2:3) அப்படியானால் தேவன் தாமே நீங்கள் அவரை அறிந்து கொள்வதற்கான ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற ஆவியை உங்களுக்கு தர வேண்டும். (எபே 1:17) பாருங்கள் பரத்திலிருந்து வருகிற ஞானமோ முதலாவது சுத்தமுள்ளதாயும், பின்பு சமாதானமும், சாந்தமும் இணக்கமுமுள்ளதாயும், இரக்கத்தாலும், நற்கனிகளாலும் நிறைந்ததாயும், பட்சபாதமில்லாதாயும், மாயமற்றதாயும் இருக்கிறது. (யாக் 3:17)

41. கிபியோனிலே கர்த்தர் சாலொமோனுக்கு இராத்திரியில் சொப்பனத்திலே தரிசனமாகி : நீ விரும்புகிறதை என்னிடத்தில் கேள் என்று தேவன் சொன்னார். அப்பொழுது சாலொமோன் தேவனை நோக்கி : நீர் தெரிந்து கொண்டதும் ஏராளமானதினால் எண்ணிக்கைக்கு அடங்காததும் இலக்கத்திற்கு உட்படாததுமான திரளான ஜனங்களாகிய உமது ஜனத்தின் நடுவில் அடியேன் இருக்கிறேன் . உமது ஜனங்களை நியாயம் விசாரிக்கவும் நன்மை தீமை இன்னதென்று வகையறுக்கவும் அடியேனுக்கு ஞானமுள்ள இருதயத்தை தந்தருளும் என்றான். சாலொமோன் இந்த காரியத்தை கேட்டது, ஆண்டவருடைய பார்வைக்கு உகந்த விண்ணப்பமாய் இருந்தது. (1இரா 3:5-16) இது தான் தேவஞானம். சாலொமோன் நீண்ட ஆயுசைக் கேட்க வில்லை, ஐசுவரியத்தை கேட்க வில்லை, தேவயானது ஒன்றே. அவன் அந்த தேவஞானத்தைக் கேட்டான். பெற்றுக் கொண்டான். கேளுங்கள், அப்பொழுது உங்களுக்கு கொடுக்கப்படும். (மத் 7:7)

42. மோசே இஸ்ரவேலரே நீங்கள் கைக்கொள்ளும் பொருட்டு, என் தேவனாகிய கர்த்தர் எனக்கு கற்பித்தபடியே நான் உங்களுக்கு கட்டளைகளையும் நியாயங்களையும் போதித்தேன். ஆகையால் அவைகளை கைக்கொண்டு நடவுங்கள். இதுவே உங்களுக்கு ஞானமும் விவேகமுமாய் இருக்கும் என்றான். (உபா4:5,6) ஆம் தேவனுடைய கட்டளைகளுக்கும், பிரமாணங்களுக்கும், நியாயங்களுக்கும், உபதேசங்களுக்கும் கீழ்ப்படிந்து நடப்பதே தேவஞானம். ஆம், ஆண்டவருக்கு பயப்படுவதே ஞானம் (யோபு 28:28) ஆம், தேவனுடைய வார்த்தைக்கு பயப்பட்டு அதன்படி நடப்பதே தேவஞானம்

இச்சைகளினால் திசை மாறி அலைகிறான். ஒருவன் மாம்ச இச்சையால் மதி மயங்கி திரிகிறான். ஒருவன் ஜீவனத்தின் பெருமையினால் தலைகால் தெரியாமல் அலைகிறான். தன்னடக்கம் இப்படிப்பட்ட கெட்ட பழக்கவழக்கத்தை நிறுத்துவது அல்ல. மாறாக இது பரிசுத்த ஆவியின் தன்னடக்கமாய் இருக்கிறது. நாம் பேசுகிற காரியம் பரிசுத்த ஆவியின் தன்னடக்கமாய் இருக்க வேண்டும். இதன் பொருள் என்னவென்றால்: நீ எவ்விதம் உன் நடையை காக்கவேண்டும் என்பதே. நீங்கள் வார்த்தைகளை அலப்புகிறவர்களாக இருக்கக் கூடாது. உங்களுடைய கோபத்தை அடக்குகிறவர்களாக இருக்க வேண்டும். யாராவது உங்களை இடைமறித்துப் பேசும்போது அவர்கள் மீது எறிந்து விழக்கூடாது. சாந்தமாக பதில் கொடுக்க வேண்டும். தேவ அன்போடும். சாந்தத்தோடும் பேசுவதே காரியம் ஆகும், அதுவே பரிசுத்த ஆவியின் தன்னடக்கம் ஆகும்.

49. உதாரணமாக இயேசுவை அவர்கள் பெயெல்செபூ என்று அழைத்த போது, அவர் அதை அவர்களுக்கு மன்னித்தார். அவர் தாடி மயிரைப் பிடித்து இழுத்து முகத்தில் துப்பினார்கள். சிலுவையை விட்டு கீழே இறங்கி வா என்றார்கள். அவரோ இவர்களுக்கு மன்னியும் தாங்கள் செய்வது இன்னதென்று அறியாது இருக்கிறார்கள் என்றார். அவர் தலைமேல் முள்முடியை வைத்து உன்னை அடித்தவன் யார் என்று கூறும் அப்பொழுது நாங்கள் உன்னை விசுவாசிப்போம் என்றார்கள். அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நீயாயமாய் தீர்ப்பு செய்கிறவருக்கு தன்மை ஒப்புவித்தார். அவர் தன்னடக்கம் உள்ளவராய் இருந்தார்.

50. இவ்விதமாக நீ உன் தன்னடக்கத்தைப் பெற்றுக் கொண்டால் அதை உன் விசுவாசத்தோடும், வல்லமையோடும், ஞானத்தோடும் கூட்டிக்கொள். இன்னுமாக நீ கோபப்பட்டு, எரிச்சலுள்ளவனாய் காணப்பட்டாயாயின், ஓ! உனக்குள் இன்னுமாக தன்னடக்கம் வரவில்லை என்று பொருள். அப்படியானால் நீ உன் விசுவாசத்தோடு, வல்லமையோடு, ஞானத்தோடு, தன்னடக்கத்தை கூட்டிச் சேர்க்க முடியாது. உன் தன்னடக்கம் அவைகளோடு சேராது. தியத்தீரா சபை மணவாட்டி விசுவாசம், வல்லமை, ஞானம் இவற்றுடன் தன்னடக்கம் என்ற சுபாவத்தையும் கூட்டிச் சேர்க்க வேண்டியவளாய் இருந்தாள். ஆனாலும் தலைக்கல் வந்து இணைவதற்குரிய வளர்ச்சியை அவள் அடையவில்லை.

51. மனந்திரும்பி கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றுக் கொள் என்று வேதம் கூறுகிறது என்று நீ கூறும்போது, ஒரு கண்டிப்பான திருத்துவக்காரன் அதை அவிசுவாசித்து, அது ஒரு பழைய அந்திக் கிறிஸ்து: அவன் ஒரு இயேசு நாமக்காரன் : இயேசு நாமம் மட்டுமே என்று கூறுகிறான் என்றால், அதை கவனித்துக் கொள். சகோதரனே அதைக் குறித்ததான உன்னுடைய தன்னடக்கம் என்ன என்று எனக்கு தெரியாது. ஆனால் அத்தகைய சந்தர்ப்பத்தில் நீ உன் நிதானத்தை இழந்து, நீ எடுக்கும் முடிவின் மீதும் எரிச்சலுடன் குதிப்பாயானால் நீ இன்னுமாக வேதம் குறிக்கும் தன்னடக்கத்தைப் பெற்றுக் கொள்ளவில்லை. எவ்விதம் பதிலளிக்க வேண்டும் என்று நீ கற்றுக் கொள்ள வேண்டும். சாந்தத்தோடும், விவேகத்தோடும், உத்தரவு சொல்ல எப்பொழுதும் ஆயத்தமாய் இருக்க வேண்டும். (1பேது 3:15) நீ அதைப் பெற்றுக் கொண்டால் உன் விசுவாசத்தோடு அதை கூட்டிக் கொள்ளலாம்.

52. அப்போஸ்தலனாகிய பவுல், திமோத்தேயுவுக்கு எழுதுவதைக் கவனியுங்கள்: சமயம் வாய்த்தாலும், வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய் திருவசனத்தை பிரசங்கம் பண்ணு: எல்லா நீடிய சாந்தத்தோடும், உபதேசத்தோடும், கண்டனம் பண்ணி, கடிந்து கொண்டு, புத்திச் சொல். ஏனென்றால், அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தை பொறுக்க மனதில்லாமல் செவித்தினவுள்ளவர்களாகி, தங்கள் சுயஇச்சைகளுக்கு ஏற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாய் சேர்த்துக் கொண்டு, சத்தியத்துக்கு செவியை விலக்கி, கட்டுக்கதைகளுக்கு சாய்ந்து போகும் காலம் வரும். நீயோ எல்லாவற்றிலும் மனத்தெளிவுள்ளவனாய் இரு என்கிறான். (2தீமோ 4:2-5) ஆக சாந்தமாக பதில் கொடுக்கவும் தெரியவேண்டும். அதே நேரத்தில் கடிந்து கண்டனம்பண்ணி புத்தி சொல்லவும் உனக்கு தெரியவேண்டும் சூழ்நிலைக்கு ஏற்றாற்போல் நீ உன்னை பயன்படுத்திக் கொள்ளவேண்டும். பரிசுத்த ஆவியின் தன்னடக்கத்தை மட்டுமே நீ எங்கும் பிரயோஜனப்படுத்திக் கொள்ள வேண்டும்.

53. பேதுரு மற்றும் யோவானின் தன்னடக்கத்தைப் பாருங்கள். ஆசாரியர்களும், தேவாலயத்து சேனைத்தலைவனும், சதுசேயரும், அப்போஸ்தலர்களை அழைத்து: இயேசுவின் நாமத்தைக் குறித்து எவ்வளவும் பேசவும் போதிக்கவும் கூடாதென்று கட்டளையிட்டார்கள். பேதுருவும் யோவானும் அவர்களுக்கு பிரதியுத்திரமாக : தேவனுக்கு செவி கொடுக்கிறதைப் பார்க்கிலும், உங்களுக்கு செவி கொடுக்கிறது தேவனுக்கு முன்பாக நியாயமாய் இருக்குமோ என்று நீங்களே நிதானித்துப் பாருங்கள். நாங்கள் கண்டவைகளையும் கேட்டவைகளையும் பேசாமல் இருக்கக் கூடாதே என்றார்கள். (அப் 4:18-20) இது தான் பரிசுத்த ஆவியின் தன்னடக்கம்.

54. பவுலின் மேல் யூதராலே சுமத்தப்படுத்தப்பட்ட குற்றம் இன்னதென்று நிச்சயமாய் அறியவிரும்பி அவன் பிரதான ஆசாரியன் மற்றும் ஆலோசனை சங்கத்தார் முன் நிறுத்தப்பட்டான். அப்பொழுது பவுல் ஆலோசனைச் சங்கத்தாரை உற்றுப் பார்த்து சகோதரரே, இந்நாள் வரைக்கும் எல்லா விஷயங்களிலும் நான் நல்மனசாட்சியோடே தேவனுக்கு முன்பாக நடந்து வந்தேன் என்று சொன்னான். அப்பொழுது பிரதான ஆசாரியனாகிய அனனியா அவனுக்கு சமீபமாய் நிற்கிறவர்களை நோக்கி : இவன் வாயில் அடியுங்கள் என்று கட்டளையிட்டான். அப்பொழுது பவுல் அவனைப் பார்த்து : வெள்ளையடிக்கப்பட்ட சுவரே, தேவன் உன்னை அடிப்பார் என்றான். நியாப்பிரமாணத்தின்படி என்னை நியாயம் விசாரிக்கிறவனாய் உட்கார்ந்திருக்கிற நீர் நியாயப்பிரமாணத்திற்கு விரோதமாய் என்னை அடிக்கச் சொல்லலாமா என்றான். சமீபத்திலே நின்றவர்கள்: தேவனுடைய பிரதான ஆசாரியனை வைகிறாயா என்றார்கள். அதற்கு பவுல் சகோதரரே இவர் பிரதான ஆசாரியன் என்று எனக்கு தெரியாது. உன் ஜனத்தின் அதிபதியை தீங்கு சொல்லாயாக என்று எழுதியிருக்கிறது என்றான் (அப்.23:1-5) பவுல் கடிந்து கொள்வதை கவனித்தீர்களா? ஆக பதில் கொடுப்பதிலும் சாந்தமும் உண்டு, கடினமும் உண்டு. அது சூழ்நிலைக்கு ஏற்றாற்போல் இருக்க வேண்டும். ஆனாலும் பரிசுத்த ஆவியின் தன்னடக்கத்தோடு அது காணப்படவேண்டும்.

55. தாவீதின் தன்னடக்கத்தை பாருங்கள். கோலியாத் : நான் இன்றைய தினம் இஸ்ரவேலுடைய சேனைகளை நிந்தித்தேன்: நாம் ஒருவரோடு ஒருவர் யுத்தம் பண்ண ஒருவனை விடுங்கள் என்று சொல்லிக்கொண்டு வந்தான். தாவீது ஜீவனுள்ள தேவனுடைய சேனைகளை நிந்திக்கிறதற்கு விருத்தசேதனம் இல்லாத இந்த பெலிஸ்தன் எம்மாத்திரம் என்றான். கோலியாத் தாவீதைப் பார்த்து : என்னிடத்தில் வா : நான் உன் மாம்சத்தை ஆகாயத்துப் பறவைகளுக்கும் காட்டு மிருகங்களுக்கும் கொடுப்பேன் என்றான். அதற்கு தாவீது : பெலிஸ்தனை நோக்கி : நீ பட்டயத்தோடும், ஈட்டியோடும், கேடகத்தோடும்

63. கர்த்தர் வருமளவும் நாம் பொறுமையை காத்துக் கொள்ளவேண்டியவர்களாய் இருக்கிறோம். (யாக் 5:7) அதாவது பயிரிடுகிறவன் பூமியின் முதற் பலனை அடையவேண்டுமென்று முன்மாரியும், பின்மாரியும் வருமளவும் நீடிய பொறுமையோடே காத்திருக்கிறான். நாமும் நீடிய பொறுமையோடு இருந்து நம்முடைய இருதயங்களை ஸ்திரப்படுத்தி கர்த்தருடைய வருகைக்காக பொறுமையோடு காத்திருக்க வேண்டும். (யாக் 5:8)

## 64. தேவபக்தி (Godliness): தேவபக்திக்குரிய இரகசியமானது : (1தீமோ3:16)

அ) இது மகா மேன்மையுள்ளது.
ஆ) தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார். ஆவியாகிய தேவன் காலம் நிறைவேறினபோது மாம்சத்தில் வெளிப்பட்டார். இவர் தேவத்துவத்தில் இரண்டாவது நபர் அல்ல. ஆவியாகிய தேவன் மாம்சத்தில். தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக கிறிஸ்துவுக்குள் வாசமாய் இருக்கிறது. (கொலோ 2:9).
இ) ஆவியிலே நீதி உள்ளவர் என்று விளங்கப்பட்டார்.
ஈ) தேவ தூதர்களால் காணப்பட்டார்.
உ) புறஜாதிகளிடத்தில் பிரசங்கிக்கப்பட்டார். .
ஊ) உலகத்திலே விசுவாசிக்கப்பட்டார்.
எ) மகிமையிலே ஏறெடுத்துக் கொள்ளப்பட்டார்.

65. தேவபக்தி என்றால் தேவனைப் போல் இருத்தல் என்று பொருள். தேவனால் பிறந்த தேவனுடைய குமாரன் எவனும் தேவனுடைய சுபாவத்தைப் பெற்றுஇருக்க வேண்டும். அவன் தேவனைப் போல் இருக்க வேண்டும். அவன் தேவனுடைய வார்த்தையின் பாகமாக இருக்கிறான். பரலோகத்தில் இருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராய் இருக்கிறது போல, நீங்களும் பூரண சற்குணராய் இருங்கள் என்பதாகும் .
அ. அவர் நீதியை விரும்பி அக்கிரமத்தை வெறுக்கிறார். (எபி1:9). தேவபக்தி உள்ளவனும் அப்படியே அக்கிரமத்தை வெறுக்கிறவனாகக் காணப்பட வேண்டும். வீட்டில், தொழில் செய்யும் இடத்தில், வேலை செய்யும் இடத்தில், ஊழியத்தின் பாதையில் எங்கும் உண்மையாய் நடந்து கொள்ள வேண்டும்.
ஆ. அவர் உண்மை உள்ளவர் (1தெச 5:24) நாமும் உண்மை உள்ளவர்களாக எல்லாவற்றிலும் காணப்பட வேண்டும்.
இ. அவர் பாவம் செய்யவில்லை. அவருடைய வாயிலே வஞ்சனை காணப்பட வில்லை. (1பேது 2:22) நம்மிடத்திலும் பாவம் காணப்படக் கூடாது. நம்முடைய வாயிலும் வஞ்சனைக் காணப்படக் கூடாது.
ஈ. அவர் குற்றம் இல்லாதவர் (1பேது 1:!9) நாமும் நம்முடைய வாழ்க்கையில் குற்றமற்றவர்களாக காணப்பட வேண்டும். ஒரு சாட்சி உள்ள வாழ்க்கை வாழ வேண்டும். குடும்ப வாழ்க்கை, தொழில் செய்யும் இடத்தில் , ஊழியம் செய்யும் இடத்தில் எங்கும் எதிலும் எந்த இடத்திலும் குற்றமற்றவர்களாக காணப்பட வேண்டும்.
உ. அவர் தாமே சோதிக்கப்பட்டு , பாடுபட்டார். (எபி 2:18) நாமும் நம்முடைய வாழ்க்கையில் சோதிக்கப்பட வேண்டும், பாடு பட வேண்டும். அனைத்தையும் சந்தித்து அவைகளை மேற்கொள்ள வேண்டும்.
ஊ. அவர் தம்முடைய பெற்றோருக்கு கீழ்ப்படிந்திருந்தார். (லூக் 2:51) நாமும் நம்முடைய பெற்றோருக்கு கீழ்ப்படிந்திருக்க வேண்டும். பிள்ளைகளே உங்கள் பெற்றோருக்கு கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள், இது நியாயம். (எபே 6:1). வேலைக்காரரே, நீங்கள் கிறிஸ்துவுக்கு கீழ்ப்படிகிறது போல, சரீரத்தின்படி உங்கள் எஜமான்களாய் இருக்கிறவர்களும் பயத்தோடும், நடுக்கத்தோடும், கபடற்ற மனத்தோடும் கீழ்ப்படியுங்கள். (எபே. 6:5).
எ. அவர் சாந்தமும், மனத்தாழ்மையும் உள்ளவராய் இருந்தார். (மத் 11:29) நாமும் மேட்டிமை இல்லாதவர்களாய் எல்லாவற்றிலும் எந்த நேரத்திலும் மனத்தாழ்மை உள்ளவர்களாய் இருத்தல் வேண்டும். சபையினர் எண்ணிக்கையை வைத்து பாஸ்டருக்கு மேட்டிமை. தனது வருமானத்தை வைத்து விசுவாசிக்கு மேட்டிமை. தனது அழகை வைத்து பெண்ணுக்கு மேட்டிமை. இவைகள் யாவும் பிசாசு மேட்டிமையை நமது வாழ்க்கையில் முற்றிலுமாக தவிர்க்க வேண்டும்.
ஏ. அவர் மன்னிக்கும் சுபாவம் உடையவராய் இருந்தார். லூக் 23:24 நாமும் ஒருவர் குற்றங்களை ஒருவருக்கொருவர் மன்னிக்கும் சுபாவம் உள்ளவர்களாய் காணப்பட வேண்டும்.
இவ்வாறாக நாம் கிறிஸ்துவின் பண்புகளை உடையவர்களாக அவருடைய குணாதிசயங்களை உடையவர்களாக அவரைப் போன்று காணப்படுவோமாகில் அதுவே தேவபக்தியாகும். கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக் கடவது. (பிலி 2:5) அப்படியானால் அது உங்களுடைய சிந்தை அல்ல. கிறிஸ்துவின் சிந்தை உங்கள் மூலமாய் வருகிறது. நீங்கள் உங்கள் சொந்த வார்த்தைகளை வெளிப்படுத்தாமல், கிறிஸ்துவின் வார்த்தைகளையே வெளிப்படுத்துவீர்கள். அது நீங்கள் தேவனைப் போல் இருத்தல் ஆகும்.

66. லவோதிக்கேயா சபைக்காலம் கொடிதான வஞ்சிப்பின் காலமாக இருப்பதால் இந்த காலத்தில் தேவபக்தியின் வேஷத்தை தரித்தவர்கள் அதிகமாக காணப்படுவார்கள். அவர்களைக் குறித்து எச்சரிக்கையாய் இருந்து, அவர்களைவிட்டு விலக வேண்டும். தியானியுங்கள் 2தீமோ 3:1-9. பொதுவாக இவர்கள் :

1. தற்பிரியராய் இருப்பார்கள்.
2. பணப்பிரியராய் இருப்பார்கள்.
3. வீம்புக்காரராய் இருப்பார்கள்.
4. அகந்தையுள்ளவர்களாய் இருப்பார்கள்.
5. தூஷிக்கிரவர்களாய் இருப்பார்கள்.
6. தாய், தகப்பன்மார்களுக்கு கீழ்ப்படியாதவர்களாய் இருப்பார்கள்.
7. நன்றியறியாதவர்களாய் இருப்பார்கள்.
8. பரிசுத்தமில்லாதவர்களாய் இருப்பார்கள்.
9. சுபாவ அன்பில்லாதவர்களாய் இருப்பார்கள்.
10. இணங்காதவர்களாய் இருப்பார்கள்.
11. அவதூறு செய்கிறவர்களாய் இருப்பார்கள்.
12. இச்சையடக்கம் இல்லாதவர்களாய் இருப்பார்கள்.
13. கொடுமையுள்ளவர்களாய் இருப்பார்கள்.
14. நல்லோரை பகைக்கிறவர்களாய் இருப்பார்கள்.




பிலதெல்பியா சபை காலத்தில் கிறிஸ்துவின் மணவாட்டி விசுவாசத்தோடு, வல்லமை, ஞானம், தன்னடக்கம், பொறுமையைக் கூட்டிக்கட்டி தேவபக்தியைச் சேர்த்துக் கொள்ள வேண்டியவளாய் இருந்தாள். ஆனாலும், மேற்கண்ட ஆறு சுபாவங்களோடும் தலைக்கல் பொருந்தாது.

71. இயேசுவுக்கும் லாசருவுக்கும் இடையில் உள்ள சகோதர சிநேகத்தை பாருங்கள். இயேசு : மார்த்தாளிடத்திலும் அவளுடைய சகோதரன் லாசருவிடத்திலும், அவள் சகோதரி மரியாளிடத்திலும் அன்பாய் இருந்தார். லாசரு மரித்தான். இயேசு இருந்த இடத்தில் மரியாள் வந்து நீர் இங்கே இருந்தீரானால் என் சகோதரன் மரித்திருக்கமாட்டான் என்றாள். அவள் அழுகிறதையும், அவளுடே கூடவந்த யூதர்கள் அழுகிறதையும் இயேசு கண்ட போது ஆவியிலே கலங்கி துயரம் அடைந்தார். இயேசு கண்ணீர் விட்டார். இதன் மூலம் இயேசு லாசருவை எவ்வளவாய் சிநேகித்தார் என்பதை வெளிப்படுத்தினார். தியானியுங்கள் யோ11வது அதி.

72. தானியேல், சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோவின் சிநேகத்தைப் பாருங்கள். இராஜாவாகிய நேபுகாத்நேச்சார், தானியேலைப் பெரியவனாக்கி அவனை பாபிலோன் மாகாணம் முழுவதும் அதிபதியாகவும், சகல ஞானிகளின் மேலும் பிரதான அதிகாரியாக நியமித்தான். இந்நிலையில் தானியேல் தன் சகோதரர்களை மறக்க வில்லை. தானியேல் வேண்டிக்கொண்டதன் பெயரில் அந்த மூவரும் பாபிலோன் மாகாணத்தின் காரியங்களை விசாரிக்கும்படி வைக்கப்பட்டார்கள். (தானி 2:48-49) தானியேல் தன் சகோதர சிநேகத்தை வெளிப்படுத்தினான். இன்று விசுவாசக் குடும்பங்களிலும், ஊழியர்கள் மத்தியிலும் இந்த சகோதர சிநேகம் உண்டா? மேலான நிலையில் உள்ளவர்கள் தாழ்ந்தநிலையில் உள்ளவர்களை தூக்கிவிட முன் வருகிறார்களா என்றால், இல்லை. ஏன்? தாழ்நிலையில் உள்ளவன் மேல் நிலைக்கு வந்துவிட்டால் தன்னைப் போல் ஆகிவிடுவானே என்ற பொறாமைதான். ரூ.3,000/- சம்பளம் வாங்குகிறவனுக்கும் ரூ30,000/- சம்பளம் வாங்குகிறவனுக்கும் ஒரே சீர்வரிசைகள் தானா? தன் மகனை விட தன் சகோதரன் மகன் அதிகமாக வாங்கிவிடக் கூடாதே என்ற பொறாமைதான். இரண்டாயிரம் செலவு செய்து படித்தவனுக்கும், நான்கு லட்சங்கள் செலவு செய்து படித்தவனுக்கும் வித்தியாசம் இல்லையா? தன் மகனை விட தன் சகோதரன் மகன் அதிகமாக வாங்குவதை தடை செய்ய பலவிதமான சூழ்ச்சிகள், தந்திரங்கள் . பொறாமையே சகோதர சிநேகத்தை சீர்குலைக்கிறது, சீர்குலைத்தது, வளர்ச்சியை தடைசெய்கிறது.

73. தாவீது, யோனத்தான் சகோதர சிநேகத்தைப் பாருங்கள். யோனத்தானுடைய ஆத்துமா தாவீதின் ஆத்துமாவோடே ஒன்றாய் இணைந்திருந்தது. யோனத்தான். தாவிதை தன் உயிரைப்போல் சிநேகித்தான். யோனத்தானுடைய மரணத்தை அறிந்த தாவீது அவன் மீது புலம்பல் பாடியதாவது: என் சகோதரனாகிய யோனத்தானே! உனக்காக நான் வியாகுலப்படுகிறேன்: நீ எனக்கு வெகு இன்பமாய் இருந்தாய்; உன் சிநேகம் ஆச்சரியமாய் இருந்தது. ஸ்திரீகள் சிநேகத்தைப் பார்க்கிலும் அதிகமானது என்றான். (1சாமு 18:1-4, 2சாமு 1:26)

74. நம்முடைய சிநேகம் மாயமற்றதாய் இருக்க வேண்டும். நீங்கள் மாயமற்ற சகோதர சிநேகம் உள்ளவர்களாய் இருக்கும்படி சுத்த இருதயத்தோடே ஒருவருக்கொருவர் ஊக்கமாய் அன்பு கூறுங்கள்.(1 பேது 1:22) யுதாசின் சிநேகத்தைப் பாருங்கள். அவன் ஒரு அப்போஸ்தலன். அவன் பரலோகராஜ்ஜியம் சமிபித்திருக்கிறது என்று பிரசங்கித்தான். வியாதியஸ்தர்களை சொஸ்தமாக்கினான். குஷ்டரோகிகளை சுத்தம் பண்ணினான். மரித்தோரை எழுப்பினான். பிசாசுகளை துரத்தினான். இவ்வாறாக மூன்றரை ஆண்டுகள் பரலோகராஜ்ஜயம் சமிபித்திருக்கிறது என பிரசங்கித்து அற்புத அடையாளங்களைச் செய்தான். ஆனாலும். பொருளாசையின் நிமித்தமாக 30 வெள்ளிக்காசுக்காக இயேசுவைக் காட்டிக்கொடுத்தான். அவனுடைய சிநேகம் மாயமுள்ளதாய் இருந்தது. இன்று தங்களை கிறிஸ்துவின் மணவாட்டி என கூறிக்கொள்பவர்கள் மத்தியிலும் யூதாசின் சிநேகமே பொதுவாக அனைத்து இடங்களிலும் காணப்படுகிறது. உண்மையான சகோதர சிநேகம் கிறிஸ்துவின் மணவாட்டியிடம் மாத்திரமே காணப்படுகிறது. அவளிடம் மட்டும்தான் காணப்படும். வெறு யாரிடமும் காணப்படாது.

75. இந்நாட்களில் பாஸ்டருக்கு சபையோர் மீது உள்ள சகோதர சிநேகம் யூதாசின் சிநேகத்தைப் போன்றே மாயமாக உள்ளது. பாஸ்டர்கள் தாங்கள் சாதுரியமான பேச்சினாலும், நயவசனிப்பினாலும் ஒரு கூட்டம் மக்களை ஆதாயப்படுத்தி அவர்களை ஆட்கொண்டு தேவனுக்கும் விசுவாசிக்கும் இடையே ஒரு ஆசாரியத்தை உண்டாக்கி விசுவாசிகளை அடிமைப்படுத்தி, அவர்களை கொள்ளையடித்து தங்களை எஜமானர்களாக்கி கொள்கிறார்கள். இதுதான் இந்நாட்களில் நடக்கிறது. ஏனென்றால் இது கொடிதான வஞ்சிப்பின் காலம்.

76. நம் மத்தியில் சகோதர சிநேகம் சிதைந்துக் காணப்படுவதற்கு காரணங்கள் என்ன? உபதேசங்களில் காணப்படும் வேற்றுமைகளே முக்கிய காரணமாக இருக்கிறது என நான் கருதுகிறேன். சாத்தான் அவனுடைய வேலையாட்களாகிய கள்ளகபடமுள்ள ஊழியக்காரர்களைக் கொண்டு சபைக்குள் பற்பல மாறுபாடான உபதேசங்களைக் கொண்டு வந்து சகோதரர்கள் மத்தியில் பிரிவினைகளை உண்டு பண்ணுகிறான். ஆனால் தேவனுடைய பிள்ளைகளைக் கலக்குகிறவன் எப்படிப்பட்டவனாய் இருந்தாலும். தனக்கேற்ற ஆக்கினையை அடைவான். உங்களை கலக்குகிறவர்கள் தரிப்புண்டுபோனால் நலமாய் இருக்கும். (கலா5:10,12)

77. சகோதர சிநேகம் நிலைத்திருக்க நாம் செய்ய வேண்டியது என்ன?

அ. ஒரு சகோதரன் மற்றொரு சகோதரனைப் பகைக்கக் கூடாது (1யோ 2:9-11) அவனை சத்துருவாக எண்ணக்கூடாது. (1தெச 3:14,15: 1யோ 4:20) தேவன் ஒளியாய் இருக்கிறார். (1யோ 1:5) அவரோடு ஐக்கியப்பட்டு ஒளியிலே இருக்கிறேன் என்று சொல்லி தன் சகோதரனைப் பகைக்கிறவன் இருளிலே இருந்து இருளிலே நடக்கிறான். ஒருவன் அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் நிருபங்களில் சொல்லிய வார்த்தைகளுக்கு கீழ்ப்படியாமற்போனால், அவன் வெட்கப்படும்படிக்கு அவனோடு கலவாதிருந்து , அதே வேளையில் அவனை சத்துருவாக எண்ணாமல், சகோதரனாக எண்ணி, அவனுக்கு புத்தி சொல்ல வேண்டும்.

ஆ. உன்னோடு விசுவாசத்தில் நம்பிக்கையில், உபதேசத்தில் ஒருவன் ஒத்துப் போகாவிட்டாலும் அவனை நேசி, அவனை வெறுக்காதே. அவனுக்கு மீண்டும், மீண்டும் உபதேசம் செய். கீழே விழுந்துக் கிடக்கும் அவனை மேலே தூக்க முயற்சி செய்.

இ. சகோதரர்களுக்குள் வாக்குவாதம் கூடாது. நாம் சகோதரர் நீ இடதுபுறம் போனால், நான் வலதுபுறம் போகிறேன். நீ வலது புறம் போனால் நான் இடதுபுறம் போகிறேன் என்று ஆபிரகாம் அன்று லோத்திடம் சொன்னதை நாம் நினைவு கூறவேண்டும். அதுதான் சகோதர சிநேகம்.

ஈ. தவறு செய்த சகோதரனை ஏழு எழுபது தரம் மன்னிக்க வேண்டும். (மத் 21:22) மன்னிப்பு என்பது ஒரு கிறிஸ்தவனுக்குரிய விஷேச குணமாகும். (மாற் 11:25.26: கொலோ 3:!3; எபே 4: 32) இது மனுஷருடைய தப்பிதங்களை ஒருவருக்கொருவர் மன்னிப்பதாகும். மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால் பரமபிதாவும்

81. முடிவாக, இனிமை நிறைந்த அந்த எதிர் வரும் காலத்தில் ஆகாயத்தில் ஒரு சந்திப்பு உண்டாயிருக்கப் போகிறது: ஆயத்தமாகவே நிலைத்திருங்கள். உங்களை ஆயத்தமாக்கிக் கொள்ளுங்கள். நீங்கள் ஒரு தவறு செய்து விட்டீர்கள் என்று எத்தனை பேர்கள் உங்களை நகைத்து, கேலி செய்தாலும் அதையெல்லாம் பொருட்படுத்த வேண்டாம். தேவனிடத்தில் விசுவாசமாய் இருங்கள். பரிசுத்தமாக ஜீவித்து, தேவனுக்காக ஜீவித்து, சரியானவற்றை தொடர்ந்து காத்துக் கொள்ளுங்கள். தொடர்ந்து முன்னேறி செல்லுங்கள். அந்த வேளை சீக்கிரத்தில் வந்து சேரும். '

82. ஆட்டுக்குட்டியானவரின் மனைவி தன்னை எப்பொழுது ஆயத்தம் பண்ணினவளாக காணப்படுவாள்? அது லவோதிக்கேயா சபையின் முடிவுக்காலமாக இருக்கும். நாம் இப்பொழுது லவோதிக்கேயா சபையின் முடிவு காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஏனோக்கு ஆதாமின் ஏழாம் தலைமுறையானவன். அவன் சபைக்காலங்களுக்கு உதாரணமாக இருக்கிறான். ஏனோக்கு மரணமடையாமல் எடுத்துக் கொள்ளப்பட்டான். ஏழாம் சபையின் காலத்தில் எடுத்துக் கொள்ளப்படுதல் நடக்கும் என்பதை இது காட்டுகிறது. ஏனோக்கைப் போன்று ஒரு சிறிய கூட்டம் எடுத்துக் கொள்ளப்படும்.

83.கர்த்தர் பிரசன்னமாகும் முன்பு மூன்று காரியங்கள் நிகழ வேண்டும். அவையாவன: முதலாவது ஆரவாரம், இரண்டாவது மரித்தோரை உயிரோடெழுப்பும் சத்தம். மூன்றாவது எக்காளம். கர்த்தர் இறங்கி வரும்போது இவை மூன்றையும் அவரே செய்கிறார். ஆரவாரம் மக்களை ஆயத்தப்படுத்த ஒரு செய்தி. உயிரோடு எழுப்பும் சத்தம் மரித்தோரை உயிரோடு எழுப்பும் லாசருவே வெளியே வா போன்றதான சத்தம். மூன்றாவதாக எக்காளம் ஊதப்பட்டு ஜனங்கள் விருந்துக்கு அழைக்கப்படுகின்றனர். அது தான் ஆட்டுக்குட்டியானவர் தம்முடைய மணவாட்டியுடன் ஆகாயத்தில் நடத்தும் விருந்து ஆகும். ஆகாயத்தில் நடக்கப்போகும் விருந்துக்காக உயிரோடு எழும்பின மணவாட்டியும், உயிரோடுள்ள மணவாட்டியும் ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்படுகிறார்கள். ஆம், கிறிஸ்துவின் மணவாட்டி கலியாணத்திற்காக ஆகாயத்திற்கு செல்கிறாள். ஆனால் சாத்தானும் அவனுடைய மணவாட்டியும் தங்கள் திருமணத்தை சாத்தானின் ஏதேனிலே முடித்துக் கொள்ளுகிறார்கள்.

84. மரித்த பரிசுத்தவான்கள், உயிரோடிக்கும் பரிசுத்தவான்களுடன் இணைந்து ஒன்றாகி விடுகிறார்கள். எல்லாரும் ஒன்றாக மேலே சென்று ஆட்டுக்குட்டியானவருடைய கலியாண விருந்துக்கென்று கிறிஸ்துவுடன் இணைகிறார்கள். நம்மை கிறிஸ்துவுடன் இணைத்துக் கொள்வது என்பது எவ்வளவு பெரிய சிலாக்கியம். என்றாவது ஒருநாள் நாம் அவருடைய மகிமையின் சரீரத்திற்கு ஒப்பான ஒரு சரீரத்தை உடையவர்களாய் அவரை கலியாணம் செய்து அவருக்குள் இணைந்து அந்த மேஜையில் உட்கார்ந்து கலியாண விருந்தில் கலந்துக் கொள்வோம். மணவாளனும், மணவாட்டியுமாக வரப்போகும் நாட்களில் நித்திய நித்திய காலமாய் வாழுவோம். கலியாணவிருந்து, மூன்றரை வருடங்களாக இருக்கும். பின்பு தேனிலவுக்காக ஆயிரம் வருடம் அரசாட்சிக்கு இந்த பூமிக்கு மணவாளனும், மணவாட்டியும் வர இருக்கிறார்கள். ஆக ஆட்டுக்குட்டியின் கலியாண விருந்து ஆயிரம் வருட அரசாட்சிக்கு முன்பு நடக்கும் ஒரு சம்பவமாக இருக்கிறது. ஆயிரம் வருட அரசாட்சி முடிவானது அல்ல. இதன் பின்பு காலமானது உண்டு. ஆயிரம் வருட அரசாட்சி என்பது ஒரு இடைப்பட்ட காலமாகும். சற்று இளைப்பாறும் காலம்.

85. இது தேவனும் அவருடைய மணவாட்டியும் இணையும் நேரமும் கூட. கிறிஸ்துவின் மனைவி அழைக்கப்பட்டாள். அவள் தேவனுடைய இராஜ்ஜியத்தில் முத்தரிக்கப்பட்டு எல்லாம் ஒன்று சேர்க்கப்பட்டு இணைய ஆயத்தமாய் உள்ளது. அவர்கள் பூமியிலிருந்து அவரோடே மகிமைக்குள் எடுத்துக் கொள்ளப்படுதலில் கொண்டு செல்லவிருக்கும் இயக்கும் சக்திக்காக காத்திருக்கின்றனர். அவர் எப்படி செய்யப்போகிறார் என்று தெரியாது. ஆனால் அவரே அந்த இயக்கும் சக்தி. மணவாட்டி சபையின் இயக்கும் சக்தி பரிசுத்த ஆவியினால் மறுபடியும் நிரப்பப்படுவதே. சரீரத்துடன் இணைய தலைக்கல் வந்துக் கொண்டிருக்கும் நேரத்தில், நாம் பரிசுத்த ஆவியை அளவுடன் பெற்று கிரியைச் செய்து கொண்டிருக்கிறோம். ஆனால் தலையும் சரீரமும் ஒன்றாக இணையும்போது, பரிசுத்த ஆவியின் முழு வல்லமை அவளை உயிருடன் எழுப்பி . . . மரித்தவர்களும் கூட, நூறு ஆண்டுகளுக்கு முன்பு கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள், அவருடைய பரிசுத்த அலங்காரத்துடன் உயிரோடு எழுந்து வானங்கள் வழியாக பறந்து செல்வார்கள். இயக்கும் சக்தி பரிசுத்த ஆவியே.



ஒரு பரிபூரண மனிதனின் வளர்ச்சி

86. தலைக்கல், அது என்ன செய்கிறது? பரிசுத்த ஆவியானவர் தனிப்பட்ட நபரின் மேல் பொருத்தப்பட்டு அவரை முத்தரிக்கிறார். எப்பொழுது? நாம் விசுவாசம் என்பதுடன் வல்லமையையும், ஞானத்தையும், தன்னடக்கத்தையும், பொறுமையையும், தேவபக்தியையும் மற்றும் சகோதர சிநேகத்தையும் கூட்டிக்கூட்டி கட்டிக் கொண்டு வரும்போது. இவ்வாறாக அவர் ஒரு தனிப்பட்ட நபரை உருவாக்கி, அவரைப்பொருத்தி பரிசுத்த ஆவியினால் முத்தரிக்கிறார்.

87. தேவனுடைய பிரமாணங்களை கைக்கொண்டிருக்கும் யூதர்கள் இயேசு கிறிஸ்துவைப் பற்றிய சாட்சியுடைய புறஜாதிகள் ஆகிய கைவிடப்பட்டதோர் கூட்டம் நாய்களைப் போல் வேட்டையாடப்பட்டு, தாங்கள் கைக்கொண்டிருக்கிறதான சாட்சிக்காக. தங்கள் ஜீவனை விடுவார்கள். பின்பு மகத்தான ஆயிர வருட அரசாட்சி ஒரு நாள் காலையில் மலர்ந்து தேனிலவு ஆரம்பமாகும். மரித்த மற்றவர்களோ ஆயிரம் வருடம் வரை எழுந்திருக்க மாட்டார்கள். அதன் பின்பு நியாயத்தீர்ப்பு ஏற்படும். ஒருநாள் இக்காலத்திற்குரிய செய்தியைக் கேட்டு பின்பு அதை மறுதலித்துப் போனவர்கள் நியாயந்தீர்க்கப்படவேண்டும். ஆண்டவரே நாங்கள் அவர்களோடு ஒருவராக எண்ணப்படாமல் இனிவரும் நாட்கள் ஒன்றில் நடக்க இருக்கும் ஆட்டுக்குட்டியானவருடைய கலியாண விருந்துக்கு அழைப்பப்பட்ட பாத்திரமாக காணப்பட கிருபை செய்யும் ஆமென்.

ஜூலை / 2008

கிறிஸ்துவின் அன்பில்
சகோ. காலேப் யோசுவா.